22-11-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : இலங்கை தொடர்பான ஐ.நாவின் அறிக்கையும் அரசியலும்**

**திறந்த கலந்துரையாடல்**

அண்மையில் இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையானது இலங்கையில் நடந்துகொண்ட முறை தொடர்பில் ஐ.நாவின் உள்ளக மீளாய்வு அறிக்கை ஐ.நாவின் செயலாளர் நாயகத்தால் கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

அது ஐ.நாவின் அமைப்பு ரீதியான செயற்பாட்டடை விமர்சிக்கின்ற உள்ளக மீளாய்வு அறிக்கையாக இருந்த போதும் அது வெளிப்படுத்தப்பட்டமையானது முக்கியமானது என்பதுடன் ஒரு உள்ளக அறிக்கை ஏன் வெளியிடப்படுகிறது என்பது கேட்கப்படவேண்டிய கேள்வியாகிறது.

இலங்கை விவகாரங்களைத் தொடர்ச்சியாக அவதானித்துவருபவர்களுக்கு அவ்வறிக்கை புதிதாக எதையும் சொல்லவில்லை என்பதை விளங்கிக்கொள்வதில் அதிக சிரமங்கள் இரா. ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை என்பதனடிப்படையில் அதில் சொல்லப்பட்ட விடயங்களுக்கு பெறுமதி உள்ளதை மறுக்க இயலாது.

அவ்வுறிக்கையானது இலங்கையில் ஒரு இனப்படுகொலையானது அரங்கேறாமல் தடுப்பதற்குரிய வழிகள் இருந்தும் அசமந்தப்போக்குடன் ஐ.நா செயற்பட்டது என்பதை கோடிட்டுக் காட்டுகிறது. அதேவேளை போர் முடிந்த பின்னர் மக்கள் முட்கம்பி வேலிகளுக்குள் துன்பப்படுகையில் ஐ.நா வாளாவிருந்ததையும் சுட்டிக்காட்டுகிறது.

அறிக்கையானது செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்படமுன்னர் சில ஊடகங்களுக்கு கசிந்தது அறிக்கையை வெளிப்படுத்தப்படுவதற்கான ஒரு காரணமாக இருக்கலாம். அதிலும் குறிப்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் சில பகுதிகள் கறுப்புமையினால் அழிக்கப்பட்டு இருந்தன. அவை குறிப்பாக ஐ.நாவின் செயலாளர் நாயகம் பன் கீ மூனையும் அவரது பிரதான அனுவலர் விஜய் நம்பியாரையும் குற்றச் சாட்டுகின்றன. நடந்தேறிய மனிதப்படுகொலைக்கான இரத்தம் தோய்ந்த கரங்களாக இவ்விருவரையும் சுட்டுகின்றன.

> ஐ.நா. சபை என்பது நவகொலனித்துவ ஏகாதிபத்திய சர்வதேச நிறுவனம் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. ஆனால் அடக்குமுறை அரசுகளின் எதேச்சாதிகாரப் போக்கிற்கு எதிராக ஐ.நா. சபையின் நடவடிக்கை மூலம் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்ற போக்கு ஒன்று இருப்பதைக் காணமுடியும்.

ஐ.நாவின் கரங்கள் இரத்தம் தோய்ந்தவையாக இருப்பது இது முதற்தடவையல்ல. குறிப்பாக 1994 இல் ருவாண்டாவில் ஐ.நாவின் அமைதிகாக்கும் படைகளின் பிரசன்னத்தில் எட்டு இலட்சம் டுக்சி இனப்பிரிவைச் சேர்ந்த ருவாண்டர்கள் ஒருமாத காலத்துக்குள் கொலை செய்யப்பட்டார்கள். அப்போது ஐ.நாவின் அமைதிக்காக்கும் படைகளுக்கு பொறுப்பாகவிருந்தவர் கொபி அனான். அவர் 2000ம் ஆண்டில் தான் ஐ.நாவின் செயலாளர் நாயகமாக இருந்தபோது ருவாண்டாவிற்கு விஜயம் மேற்கொண்டு கொல்லப்பட்டவர்களாக நிர்மானிக்கப்பட்ட நினைவிடத்தில் பூக்கொத்தொன்றை வைத்து வருத்தம் தெரிவித்துக்கொண்டார். அவ்வளவுதான்.

வரலாற்றில் இன்னும் கொஞ்சம் பின்னே சென்றால் 1960இல் கொங்கோவின் அரசுத் தலைவர் பற்றிஸ் லுமும்பா ஐ.நாவின் அமைதிகாக்கும் படைகளின் காவலில் இருக்கும் போது கொலை செய்யப்பட்டார். அதை விசாரிக்கச் சென்ற ஐ.நாவின் மிகவும் காத்திரமான செயலாளர் நாயகம் என்று இன்றும் போற்றப்படுகின்ற டக் ஹமர்சீல்ட் விமானவிபத்தில் கொலை செய்யப்பட்டார். இதுதான் ஐ.நாவின் யோக்கிதை.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

வரவுசெலவுத்திட்டம் 2013

S. கஜேந்திரன் | 29-11-2012



என்.எஸ். கிருஷ்ணன்

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் (நவம்பர் 29, 1908 - ஆகஸ்ட் 30, 1957) தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகரும் பாடகரும் ஆவார்.

நகைச்சுவை மூலமாக கருத்துகளை பரப்பினார். பிறர் மனதைப் புண்படுத்ததாமல் பண்படுத்தும் முறையில் நகைச்சுவையைக் கையாளும் கலை உணர்வு மிக்கவர்.

பழங்கலைகளின் பண்பு கெடாமல் அவற்றைப் புதுமைப் படுத்தி மக்கள் மன்றத்திற்குத் தந்தவர். அறிவியல் கருத்துக்கள் நாட்டில் பரவ வேண்டும் என்பதில் அக்கறை, ஆர்வம் கொண்டவர்.

ஏறத்தாழ 150 படங்களுக்கு மேல் நடித்துள்ள அவர் சீர்திருத்தக் கருத்துக்களை திரைப்படங்களில் துணிவோடு எடுத்துக் கூறியவர்.

இவரைப்பற்றிய தகவல்கள் அடங்கிய வலைத்தளம் : kalaivanar.com

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## இலங்கை தொடர்பான ஐ.நாவின் அறிக்கையும் அரசியலும்

முன்பக்கத் தொடர்ச்சி..

இவ்வறிக்கை வெளியிடப்பட்டவுடன் தமிழ் மக்கள் மத்தியில் ஐ.நா தொடர்பான மாயைகளும் நம்பிக்கைகளும் மீண்டும் உருவாக்கப்படுகின்றன. இது ஆபத்தானது. இவ்விடத்தில் ஐ.நாவின் அரசியலை மீள்பார்வைக்கு உட்படுத்துவது தேவையாகிறது.

உள்நாட்டு அடக்குமுறையாளர்களுக்கு ஐ.நா. சபையின் சில செயற்பாடுகள் அச்சுறுத்தலாக இருப்பதுண்டு. அதே போன்று உலகில் பெரிய சக்திகள் சிறிய நாடுகளை அச்சுறுத்தி அடிபணிய வைக்க ஐ.நா. சபையின் சில செயற் பாடுகளை திட்டமிட்டு முடுக்கி விடுவதுமிண்டு. ஐ.நா. சபையின் சில செயற்பாட்டுத் தளங்களுக்கு அப்பால் மேலாதிக்க சக்திகள் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கும் அவற்றுக்கு அடிபணியாத நாடுகளை அடிபணிய வைக்கவும் செயற்பட்டு ஆக்கிரமிப்புகளையும் செய்துள்ளன.

ஈராக் முதல் லிபியா வரை இவற்றை அவதானிக்க முடிந்துள்ளது. இந்த மேலாதிக்க சக்திகள் ஐ.நா. சபையின் செயற்பாடுகளினால் கேள்விக்குட்படுத்தப்பட முடியாதவையாக இருக்கின்றன என்பதும் தெரிந்ததே. ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளை ஐ.நா. சபை கேள்விக்குப்படுத்துவது என்பதும் வேடிக்கையானது. இந்த அங்கத்துவ நாடுகள் அவற்றின் நேச நாடுகளுக்கு எதிராக ஐ.நா. சபை எடுக்கும் அதிகாரத்தை இரத்து செய்யும் அதிகாரத்தை அல்லது சிறப்புரிமையைக் கொண்டுள்ளன.

உலக ஒழுங்கு ஐக்கிய அமெரிக்க, சோவியத் யூனியன்; ஆகிய இரண்டு துருவ ங்களாக இருந்தபோது குழப்பமான ஐ.நா.வின் செயற்பாடுகள் ஒருதலைப்பட்சமாக இருந்தது குறைவு. ஆனால் 1980களின் முடிவில் சோவியத் யூனியனின் முழுமையான சிதைவின் பின்னர் அமெரிக்கா அதன் அதிகாரத்தை ஐ.நா. சபைக்கூடாக அல்லது தான் தனியாக நிலை நாட்டி வருகிறது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் மேலாதிக்க அல்லது ஏகாதிபத்திய சக்திகள் சிறிய நாடுகளை மிரட்டி அடிபணிய வைப்பதில் வெற்றிகண்டு வருகின்றன. அதேவேளை அடக்குமுறை அரசுகளும் குழப்பமான சூழ்நிலையில் ஐ.நா. சபையின் அழுத்தங்களை தவிர்ப்பதற்கு ஐ.நா. பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கின்ற ரஷ்யா, சீனா ஆகியவற்றை பயன்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வருவதை அவதானிக்க முடியும்.

ஐ.நா. சபை என்பது நவகொலனித்துவ ஏகாதிபத்திய சர்வதேச நிறுவனம் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. ஆனால் அடக்குமுறை அரசுகளின் எதேச்சாதிகாரப் போக்கிற்கு எதிராக ஐ.நா. சபையின் நடவடிக்கை மூலம் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்ற போக்கு ஒன்று இருப்பதைக் காணமுடியும்.

மக்கள் விரோத அடக்குமுறை அரசுகளுக்கு எதிரான சர்வதேச ரீதியான நடவடிக்கைகளில் ஐ.நா. சபையூடாக மட்டுப்படுத்தப்பட்ட தாக்கம் கொண்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும். இந்த நடவடிக்கைகளை ஏகாதிபத்தியம் பயன்படுத்தும் ஆபத்திருக்கின்ற போதும் இந் நடவடிக்கைகளில் அடக்குமுறை அரசுகளின் கொடுமைகளைக் கேள்விக்குட்படுத்தச் சந்தர்ப்பம் இருப்பதுடன், அடக்குமுறை அரசுகள் மீது அழுத்தங்கள் ஏற்படவும் வாய்ப்புகள் உண்டு.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கேட்பதை ஏகாதிபத்தியச் சதியாகவும், நீதி மறுப்பதை ஏகாதிபத்திய எதிர்ப்பாகவும் கொள்வது இலங்கை ஆளும் வர்க்கங்களினதும் அடக்குமுறை அரசினதும் நிலைப்பாடாகும்.

அடக்கப்படும் ஒடுக்கப்படும் தொழிலாளர்கள், விவசாயிகள், தேசிய இனங்களது நிலைப்பாடானது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். என்பதாகும் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதாகவே இருக்க முடியும். இந்த நிலைப்பாட்டை முன்நகர்த்த இலங்கை மக்களின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் அவசியம்.

பாதிக்கப்பட்டவர்கள் உள்நாட்டுச் சட்டங்களின் கீழும் சர்வதேசச் சட்டங்களின் கீழும் நடவடிக்கைகளை எடுக்க உரிமை உடையவர்கள். இன்றைய அரசுகள் ஐ.நா.வின் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டவைகளாகவே இருக்கின்றன. அவற்றின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அரசுகள் முகம் கொடுக்க வேண்டியுள்ளன. ஆனால் இவை மிகவும் வரையறுக்கப்பட்டவை என்பதனை மக்கள் விளங்கிக் கொள்வது அவசியம்.

எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும், குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கவும் அனைத்து மக்களும் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டியது அவசியம். இதனை அடக்கு முறையாளர்களினதும், ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலின் கீழும் செய்ய முடியாது. மக்களுக்கான நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க வேண்டும். அனைத்து அடக்கப்பட்ட மக்களினதும் ஐக்கியப்பட்ட போராட்டத்தை தவிர இதற்கு வேறு வழிகள் எதுவுமில்லை.



## முந்தைய புண்ணிய பூமி!

பழைய பௌத்தம் பழையதே
போதனைகள் வீணானதே!

உயிரினங்கள் யாவுமே
அதில் கூறியிருப்பது போல்
அல்லலுறாமலிருக்கத் தேவையில்லை!

துறவி, வைத்தியன், ஆசிரியன், விவசாயி, கூலியென
ஆடையுடுத்தி வேறுபாடு கொண்டாலும்
பலிக்குப் பலி கொள்வதில் - அயலவர்
குருதி குடிப்பதில் யாவரும் நிகரே!

பலிகொள்வோர்தமைப் பாதுகாத்து, வாழ்த்தும்
விகாரை வடிவ வியாபார ஸ்தலங்களுக்கு
அடுத்த புத்தன் வருகை தரும்வரை
குருட்டு பக்தி சகிதமே இருக்கும்
இந்தக் குலம்

சிங்கள மொழிமூலம் : மகேஸ் முனசிங்க
தமிழில் : மாக்ஸ் பிரபாகர்

**வரவுசெலவுத்திட்டம் 2013**

(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )

* 2013 வரவுசெலவுத்திட்டத்தின் உள்ளடக்கம் பற்றிய சுருக்கமான அறிமுகம்

* கவனிக்கப்படவேண்டிய முக்கியமான விடயங்கள்

* கடந்தகால வரவுசெலவுத்திட்டங்களுடனான ஒப்பீடு

* இவ்வரவு செலவுத்திட்டத்தால் ஏற்படக்கூடிய நன்மையும் தீமையும்.

* வரவுசெலவுத்திட்டத்தில் வெளிப்படையாகத்தெரியும் அரசியல்கள்.

* வரவுசெலவுத்திட்டத்தின் உள்ளரசியல்கள்.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA